**12. இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்**

அ) ஜப்பானைக் கைப்பற்றியது யார்?

அமெரிக்கப் படைத்தளபதி ஜெனரல் மெக் ஆர்தர் தலைமையிலான படை.

ஆ) இரண்டாம் உலகப் போருக்குப்பின் தோன்றிய இரு வல்லரசுகள் யாவை?

அமெரிக்கா, இரஷ்யா

இ) போருக்குப் பின் சுதந்திரம் பெற்ற நாடுகள் யாவை?
இந்தியா, இலங்கை, பர்மா, எகிப்து, மலேசியா

ஈ) ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது ஏன்?
உலக அரங்கில் அமைதியைப் பாதுகாக்கவும், உலக மக்களிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் தோற்றுவிக்கப்பட்டது.

13. **கான்பூர்**

அ) கான்பூரில் நடந்த புரட்சியாளர்களுடன் இணைந்தது யார்?
நானாசாகிப்

ஆ) ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்ட நிலை என்ன?
ஆங்கிலேயப்படை கலகக்காரர்களிடம் சரணடைந்தது. ஆங்கிலேய ஆண்கள், பெண்கள், குழந்தைகள் இரக்கமின்றி கொல்லப்பட்டனர்.

இ) நானாசாகிப்பைத் தோற்கடித்தது யார்?
சர்காலின் காம்ப்பெல்

ஈ) கான்பூர் எப்பொழுது ஆங்கிலேயர் வசம் வந்தது?
1857- ஆண்டு நவம்பர்

14. **மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி**

அ) மத்திய இந்தியாவில் பெரும்புரட்சியை வழிநடத்திச் சென்றவர் யார்?
ஜான்சிராணி இலட்சுமிபாய்

ஆ) இராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது?
குவாலியர்

இ) இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன?
1858ம் ஆண்டு நடைப்பெற்ற போரில் கொல்லப்பட்டார்.

ஈ) தாந்தியா தோப்பிற்கு நிகழந்தது என்ன?
கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

15. **பிரம்ம சமாஜம்**

அ) பிரம்ம சமாஜத்தினை நிறுவியவர் யார்?
இராஜாராம் மோகன்ராய்

ஆ) இராஜராம் மோகன்ராய் பயின்ற மொழிகள் யாவை?
அராபிக், சமஸ்கிருதம், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம் மற்றும் ஹுப்ரு

இ) இராஜாராம் மோகன்ராய் எழுதிய புத்தகங்கள் யாவை?
ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள், அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் வழி.

ஈ) பிரம்ம சமாஜத்தின் நம்பிக்கை யாது?
"ஒரே கடவுள்" என்ற கொள்கையின் அடிப்படையில் பொது சமயத்தில் நம்பிக்கை கொண்டிருந்தது.

16. **ஆரிய சமாஜம்**

அ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் இயற்பெயர் என்ன?
மூல் சங்கர்

ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் குரு யார்?
சுவாமீ விராஜனந்தர்.

இ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கை என்ன?
”வேதங்களை நோக்கிச் செல்”

ஈ) ஆரிய சமாஜம் எதனை ஆதரித்தது?
பெண்கல்வி, கலப்பு மணம், சமபந்தி உணவு முறை.

17. **பிரம்மஞான சபை**

அ) பிரம்மஞான சபையை நிறுவியவர் யார்?
மேடம் பிளாவட்ஸ்கி மற்றும் ஹென்றி எஸ்.ஆல்காட்.

ஆ) பிரம்மஞான சபை நிறுவப்பட்டது ஏன்?
கடவுள் பக்தி மற்றும் உண்மை அறிவை பெறுவதற்காக.

இ) 1893ஆம் ஆண்டு பிரம்மஞான சபையின் தலைவர் யார்?
திருமதி. அன்னிபெசன்ட்

ஈ) பிரம்மஞான சபையின் தலைமையகம் எங்குள்ளது?
சென்னையில் உள்ள அடையார்

18. **இராமகிருஷ்ண மடம்:**

அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர் யார்?
சுவாமி விவேகானந்தரின் குரு ஆவார்.

ஆ) இராமகிருஷ்ண மடத்தினை நிறுவியது யார்?
சுவாமி விவேகானந்தர்

இ) உலக சமய மாநாடு எங்கு, எப்பொழுது நடைபெற்றது?
1893ம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்றது.

ஈ) உலக சமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர் யார்?
சுவாமி விவேகானந்தர்.

19. **அலிகார் இயக்கம்**

அ) முஸ்லீம்களின் முதல் சமய இயக்கத்தின் பெயர் என்ன?
அலிகார் இயக்கம்

ஆ) சர் சையது அகமதுகான் உறுதியாக நம்பியது என்ன?
இந்து - முஸ்லீம் ஒற்றுமையை உறுதியாக நம்பினார்.

இ) சர் சையது அகமது கானின் சாதனை யாது?
1875ஆம் ஆண்டு அலிகாரில் தோற்றுவிக்கப்பட்ட முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி.

ஈ) சர்சையது அகமதுகான் வெளியிட்ட செய்தித்தாளின் பெயர் என்ன?
தாசில் -உத்- அ.்.லக்

20. **டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்**

அ) தலித்துக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களின் மீட்பாளர் யார்?
டாக்டர். பி.ஆர். அம்பேத்கார்

ஆ) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் யார்?
டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார்

இ) இந்தியா அரசாங்கத்தால் இவர் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டார்?
இந்திய அரசு ” பாரத ரத்னா” என்ற விருதை வழங்கி சிறப்பித்தது.

ஈ) மும்பையில் மகத் மார்ச் என்ற பேரணியை தலைமை ஏற்று நடத்தியது ஏன்?

தீண்டத்தகாத பொதுக்குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமையைப் பெறுவதற்காக 1927-ஆம் ஆண்டு மும்பையில் மகத் மார்ச் பேரணியை தலைமை ஏற்று நடத்தினார்.

21. **ஜாலியன் வாலாபாக் படுகொலை**

அ) கைது செய்யப்பட்ட முக்கியமான தலைவர்கள் யார்?
டாக்டர் சத்தியபால் மற்றும் டாக்டர் சாய்ப்புதீன் கிச்லு.

ஆ) மக்கள் எங்கு கூடினர்?
அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் (பூங்கா) என்னுமிடத்தில் கூடினர்.

இ) அமிர்தசரஸின் ஆங்கில இராணுவ தளபதி யார்?
ஜெனரல் டயர்

ஈ) இரவீந்திரநாத் தாகூர் செய்தது என்ன?
இரவீந்திரநாத் தாகூர் தனது நைட்வுட் பட்டத்தைத் துறந்தார்.

22. **சைமன் குழு**

அ) சைமன் குழு ஏன் நியமிக்கப்பட்டது?
1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின் பயன்பாட்டை ஆராயவும், இந்திய நிர்வாகத்தை மேம்படுத்த ஆலோசனைகளை வழங்கவும் சைமன் குழு நியமிக்கப்பட்டது.

ஆ) இந்தியர்கள் இக்குழுவை ஏன் நிராகரித்தனர்?
இக்குழுவில் ஒரு இந்தியர்கூட இடம் பெறவில்லை.

இ) சைமன் குழு எப்படி வரவேற்கப்பட்டது?
"சைமனே திரும்பிச் செல்" என்று கருப்புக்கொடி போராட்டத்துடன் வரவேற்கப்பட்டது.

ஈ) சைமன் குழு எதிர்ப்புப் போராட்டத்தின் போது இறந்த இந்திய தலைவரின் பெயரைக் குறிப்பிடுக.
லாலா லஜபதிராய்

23. **ஆகஸ்ட் நன்கொடை**

அ) ஆகஸ்ட் நன்கொடை எப்பொழுது அறிவிக்கப்பட்டது?
1940

ஆ) இரண்டாம் உலகப்போருக்கு பின் இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட உறுதிமொழி என்ன?
போருக்குப்பின் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும். இந்தியாவிற்கு அரசியல் நிர்ணய சபை அமைக்க ஒரு குழு அமைக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

இ) போர்க்குழு அமைக்கப்பட்டது ஏன்?
இந்தியாவுக்கு அரசியல் நிர்ணயசபை அமைக்க போர்க்குழு அமைக்கப்பட்டது.

ஈ) போர்க் குழுவில் யாருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது?
ஒரு இந்தியருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது,

24. **மவுண்ட் பேட்டன் திட்டம்**

அ) 1947-ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றவர் யார்?
மவுண்ட் பேட்டன் பிரபு

ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார்?

மவுண்ட் பேட்டன் பிரபு

இ) மவுண்ட் பேட்டன் திட்டம் என்றால் என்ன?
இந்தியா, இந்திய யூனியன் என்றும் பாகிஸ்தான் யூனியன் என்றும் இரு நாடுகளாக பிரிக்கப்படும் என்று மவுண்ட்பேட்டன் பிரபு அறிவித்தார்.

ஈ) மவுண்ட் பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் பிரதிபலிப்பு என்ன?
மவுண்ட் பேட்டன் திட்டத்தினை காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் ஏற்றுக் கொண்டன.

25. **கே. காமராஜர்**

அ) காமராஜர் எப்படி அரசியலில் நுழைந்தார்?
1924-ஆம் ஆண்டு வைக்கம் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் அரசியலில் நுழைந்தார்.

ஆ) 1930-ல் எங்கு சிறையில் அடைக்கப்பட்டார்?
அலிப்பூர் சிறையில்

இ) 1947-ஆம் ஆண்டு இந்திய தேசியக் கொடியை எங்கு ஏற்றினார்?
சத்திய மூர்த்தியின் வீட்டில்

ஈ) காமராஜர் எப்பொழுது இறந்தார்?
அக்டோபர் 2, 1975-ல் இறந்தார்.

26. **சுயமரியாதை இயக்கம்**

அ) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?
பெரியார் ஈ.வே.இராமசாமி

ஆ) சுயமரியாதை இயக்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
பெரியாரின் கொள்கைகளை பரப்பவும், நடைமுறைப்படுத்தவும்

இ) இந்த இயக்கம் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது?
1925

ஈ) சுயமரியாதை இயக்கத்தின் தொடர் போராட்ட விளைவாக அரசு இயற்றிய சட்டங்களை எழுதுக.
i. பெண்கள் சொத்துரிமைச் சட்டம் மற்றும் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்.

## பொருளியல்

1. நாட்டு வருமானத்தை வரையறு?
ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

2. தலா வருமானம் என்றால் என்ன?
நாட்டு வருமானத்தை நாட்டு மக்கள் தொகையால் வகுப்பது தலா வருமானம் ஆகும்.
தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

3. தலையிடாக் கொள்கை - சிறு குறிப்பு வரைக.
தலையிடாக் கொள்கை என்பது அரசு பொருளாதாரச் செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.

4. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்று நோக்கங்களை எழுதுக.

- வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துதல்
- வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல்
- வறுமையை ஒழித்தல்

5. பசுமை புரட்சி குறித்து சிறு குறிப்பு வரைக

- ❖ 1967ஆம் ஆண்டு இந்தியாவில் பசுமை புரட்சிஅறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ நில சீர்திருத்தம்,அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் பயன்படுத்தப்பட்டது.
- ❖ இதன் மூலம் உணவு உற்பத்தி அதிகரித்தது.

6. கலப்புப் பொருளாதாரம் என்றால் என்ன?
பொதுத்துறையும் தனியார் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுவது கலப்புப் பொருளாதாரம் ஆகும்.

7. தாராளமயமாதல் என்றால் என்ன?
தாராளமயமாதல் என்பது தனியார் துறையில் தொழில் நிறுவனங்களுக்கான விதிமுறையும் கட்டுப்பாடுகளையும் திரும்பப் பெறுவதாகும்.

8. தனியார் மயமாதல் என்றால் என்ன?
பொதுத்துறை நிறுவனங்களை தனியார் உடைமையாக்குவதே தனியார்மயமாதலாகும்.

9. உலகமயமாதல் - சிறு குறிப்பு வரைக.
ஒரு நாட்டின் அங்காடியை பன்னாட்டு அங்காடியுடன் தொடர்பு படுத்துவதே உலகமயமாதல் ஆகும்.

## குடிமையியல்

1. உலக அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியாவின் பங்கை விளக்குக:
உலக நாடுகளிடையே அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2. உலக அமைதி ஒரு அவசியமானது ஏன்?
உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உலக அமைதி மூலம் மட்டுமே அடைய முடியும். இது வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.

3. பஞ்ச சீலத்தின் ஐந்து கொள்கைகள் யாவை?

- ❖ ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்.
- ❖ எந்த ஒரு நாடும் பிறநாட்டைத் தாக்கக் கூடாது.
- ❖ ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் பிறநாடுகள் தலையிடக்கூடாது.
- ❖ அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
- ❖ ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

4. இன ஒதுக்கல் கொள்கை பற்றி ஒரு குறிப்பு வரைக:
   - ❖ இன ஒதுக்கல் கொள்கை என்பது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட இன வேறுபாட்டுக் கொள்கையாகும்.
   - ❖ இந்தியா வழங்கிய தொடர் ஆதரவு மற்றும் நெல்சன் மண்டேலாவின் தொடர் போராட்டம் இவற்றால் இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்தது.

5. ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்தை எழுதுக.
   மக்களால், மக்களுக்காக, மக்களே ஆட்சி செய்வது ஜனநாயகம் ஆகும்.

6. தேசியக் கட்சிகள் யாவை?
   நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசியக் கட்சிகள் என்றழைக்கப்படுகின்றன. (எ.கா) காங்கிரஸ், பா.ஜ.க

7. தேர்தல் ஆணையத்தின் பணிகள் பற்றி சுருக்கமாக குறிப்பு தருக.
   - ❖ அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது.
   - ❖ அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் சின்னங்கள் ஒதுக்குவது.
   - ❖ வாக்களிக்கும் நாட்கள் வாக்குகள் எண்ணப்படும் நாட்களை அறிவித்தல் மற்றும் இறுதி முடிவுகளை அறிவிப்பது.

8. இந்தியாவிலுள்ள சில சமயங்களின் பெயர்களை குறிப்பிடுக.
   வேத சமயம், இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், ஜொராஸ்டிரிய சமயம், இஸ்லாம், புத்தசமயம், சமண சமயம், சீக்கிய சமயம்.

9. நுகர்வோர் பாதுகாப்பு உரிமைச்சட்டம் (கோப்ரா) சிறு குறிப்பு வரைக?
   நுகர்வோரின் குறைகளை வெளிப்படுத்தும் உரிமை நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986ல் இயற்றப்பட்டது. இது நுகர்வோரின் மகாசாசனம் என்று அழைக்கப்படுகிறது.

**புவியியல்**

1. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள் யாவை?
   வடக்கு மலைகள்
   வட இந்திய பெரும் சமவெளிகள்
   தீபகற்ப பீடபூமி
   கடற்கரைச் சமவெளிகள்
   தீவுகள்

2. இமயலையின் முக்கியத்துவத்தில் ஏதேனும் இரண்டினைக் கூறு.
   1. இமயமலைகள் இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லையாக அமைந்துள்ளது.
   2. இங்கு எப்போதும் பனி உறைந்து காணப்படுவதால் அந்நியப் படையெடுப்பைத் தடுக்கிறது.

3. இந்தியாவின் வடக்கு மலைகளில் உள்ள இரண்டு முக்கிய புனிதத் தலங்களை குறிப்பிடுக.
   அமர்நாத், பத்ரிநாத், கேதார்நாத், வைஷ்ணவி தேவி கோயில்கள்

4. மேற்குக் கடற்கரைப் பகுதியில் டெல்டாக்களை அமைக்காத ஆறுகள் யாவை?
   நர்மதை, தபதி, மாகி, சபர்மதி

5. இந்தியத் தீவுக் கூட்டங்கள் யாவை?
அந்தமான் நிக்கோபார் தீவுகள், இலட்சத்தீவுகள்

6. இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளின் பெயர்களை எழுதுக.
அட்சங்கள், உயரம், கடலிலிருந்து தூரம், காற்று, மலைகளின் அமைவு

7. பருவகாற்று என்பதன் பொருள் யாது ?
   1. மான்சூன் என்ற சொல் அரேபிய சொல்லான ”மௌசிம்” என்பதிலிருந்து வந்தது.
   2. இதன் பொருள் பருவகாலம் என்பதாகும்.

8. வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகளின் ஏதேனும் நான்கு அம்சங்களைக் குறிப்பிடுக.
ஆண்டு மழைப்பொழிவு 200 சென்டிமீட்டருக்கு அதிகமான இடங்களில் காணப்படுகின்றன.
மரங்களின் பசுமை நிறம் மாறாமலும் இலைகளை உதிர்க்காமலும் காணப்படுகின்றன.
மிக அடர்த்தியானவை.

9. ஜெட் காற்றுகள் என்றால் என்ன? அவை எவ்வாறு இந்தியாவின் காலநிலையை பாதிக்கிறது?
வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் காணப்படும் காற்றோட்டம் ”ஜெட் காற்று” என்கிறோம்.
இக்காற்று இந்தியாவில் பருவக்காற்றின் தொடக்கம் மற்றும் முடியும் காலத்தை நிர்ணயிக்கிறது.

10. மிக அதிக மழைபெறும் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
கிழக்கு இமயமலையின் தெற்குச் சரிவு, அஸ்ஸாம், மேற்கு வங்காளம், கொங்கணம், மலபார் கடற்கரையை உள்ளடக்கிய மேற்குக் கடற்கரைப் பகுதிகள்.

11. “பருவ மழை வெடிப்பு” என்பதன் பொருள் யாது?
தென்மேற்குப் பருவகாற்று கேரளாவின் தென் பகுதியை அடையும் போது பலத்த இடிமின்னலுடன் கூடிய மழையை அளிப்பதன் மூலம் தென்மேற்குப் பருவகாலம் தொடங்குவதைக் காட்டுகிறது. இது “பருவ மழை வெடிப்பு“ என்று பெயர்.

12. இயற்கை வளம் என்றால் என்ன?
அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்து பொருட்களையும் இயற்கை வளங்கள் என்கிறோம்.

13. செழுமையான மண்ணில் காணப்படும் பொருட்கள் யாவை?
கந்தகம், குளோரின், செம்பு போன்ற நுண்ணிய சத்துக்களும் நைட்ரஜன், பொட்டாசியம் போன்ற பெரிய சத்துக்களும் காணப்படுகின்றன.

14. இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள் யாவை?
ஆந்திரப்பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார், இராஜஸ்தான்

15. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?
நிலத்தோற்றம், காலநிலை, மண்வகை, நீர்

16. வேளாண் தொழிலின் வகைகள் யாவை?
பழமையான வேளாண்மை, தன்னிறைவு வேளாண்மை, வணிக வேளாண்மை, தோட்ட வேளாண்மை.

17. இந்திய வேளாண்மையின் பருவ காலங்கள் யாவை?

| | | |
|---|---|---|
| காரி ஃப் பயிர்கள் | - | ஜுன் - நவம்பர் |
| ராபி பயிர்கள் | - | நவம்பர் - மார்ச் |
| சையத் பயிர்கள் | - | மார்ச் - ஜூன் |

18. தினைவகைப் பயிர்கள் எங்கு, ஏன் பயிரிடப்படுகின்றன?
இப்பயிர்கள் வளமற்ற அல்லது செழிப்பற்ற மண்ணில் பயிரிடப்படுகின்றன.
வறட்சியைத் தாங்கும் பயிர்கள்
அதிக சத்துமிக்கவை.
கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுகிறது.

19. பருத்தி விளையுமிடங்களைக் கூறுக.
குஜராத், மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, மத்தியபிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா.

20. தோட்டப்பயிர்கள் யாவை?
தேயிலை, காப்பி, இரப்பர்

21. உற்பத்தி என்றால் என்ன?
கிடைக்கப் பெறுகின்ற மூலப்பொருட்களைக் கொண்டு கைத்தொழில் வாயிலாகவோ அல்லது இயந்திரங்கள் வாயிலாகவோ முறைப்படுத்தி பயன்பாடு மற்றும் மதிப்பீட்டு பொருட்களாக மாற்றுவது உற்பத்தி ஆகும்.

22. சணல் பொருட்கள் யாவை?
சணல் பைகள், கூடாரத்துணி, வலைப்பைகள், கோணிப்பைகள், கம்பளங்கள், விரிப்புகள்,.

23. தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?
மூலப்பொருட்கள், எரிசக்தி, போக்குவரத்து, மனித சக்தி, நீர்வளம், சந்தை, அரசாங்கக் கொள்கைகள்.

24. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் யாவை? எ.கா. தருக.
இவை வேளாண் பொருட்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன.
எ.கா. பருத்தி ஆலைகள்
சணல் ஆலைகள்
சர்க்கரை ஆலைகள்

25. நீர் மாசடைதல் என்றால் என்ன?
வேதியியல், இயற்பியல் அல்லது உயிரியல் மாற்றம் நன்னீரின் தரத்தில் ஏற்படுவதாகும்.

26. உயிரினப் பன்மை என்றால் என்ன?
உயிரினப் பன்மை எனப்படுவது பரந்த வேறுபட்ட உயிரினங்களான தாவரங்கள் விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகளின் தொகுப்பே ஆகும்.

27. வணிகம் என்றால் என்ன? வணிகத்தின் வகைகள் யாவை?
வணிகம் என்பது சேவைகளை வாங்கும், விற்கும் அல்லது பண்டமாற்றம் செய்யும் செயல் முறையாகும்.
வகைகள் :1. உள்நாட்டு வணிகம்
2. பன்னாட்டு வணிகம்

28. தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன?
புவியின் எந்த ஒரு பொருளையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல் புவியின் விவரங்களை தொலைவிலிருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வாகும்.

29. தொலை நுண்ணுணர்வின் பகுதிகள் யாவை?
1. இலக்கு
2. ஆற்றல் மூலம்
3. பிரதிபலிக்கும் வழி
4. உணர்வி

**வரலாறு**

1. ஏகாதிபத்தியம் வரையறு?
ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் ஏகாதிபத்தியம் ஆகும்.

2. காலனி ஆதிக்கம் என்றால் என்ன?
காலனி ஆதிக்கம் என்பது குடியேற்றங்களை அந்நிய நாட்டில் ஏற்படுத்தி அதன் இயற்கை வளங்களைச் சுரண்டுதல் ஆகும்.

3. இராணுவ ஏகாதிபத்தியம் பற்றி எழுதுக.
அமெரிக்கா ஈராக்கின் மீது படையெடுத்து அங்கு தன் நாட்டிற்குச் சாதகமான ஒரு அரசை ஏற்படுத்தியது. இது இராணுவ ஏகாதிபத்தியம் என அழைக்கப்படுகிறது.

4. முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணம் யாது?
ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசர் பிரான்சிஸ் பெர்டினான்டும் அவரது மனைவி இசபெல்லாவும் செர்பிய இளைஞரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆஸ்திரியா 1914 ஆம் ஆண்டு ஜீலை 28ம் தேதி செர்பியா மீது போரை அறிவித்தது.

5. முதல் உலகப்போரில் அமெரிக்க ஈடுபட்டதற்கான காரணங்கள் :
1917 ஆம் ஆண்டு அமெரிக்க வணிகக் கப்பல் லூசிட்டானியாவை ஜெர்மானிய நீர்முழ்கிக் கப்பல் மூழ்கடித்தது. எனவே அமெரிக்கா ஜெர்மனி மீது போர் அறிவிப்பு செய்தது.

6. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை?
1. பொதுச்சபை
2. நிர்வாக சபை
3. செயலகம்
4. சர்வதேச நீதிமன்றம்
5. சர்வதேச தொழிலாளர் அமைப்பு

7. பொருளாதாரப் பெருமந்தம் தோன்றக் காரணங்கள் யாவை?
அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவும், பங்குகளின் விலை உயரும் என்று கடன் வாங்கி முதலீடு செய்ததும் இப்பெருமந்தத்திற்கு காரணம் ஆகும்.

8. பாசிசம் - பொருள் கூறுக.
பாசிசம் என்னும் சொல் பாசிஸ் என்னும் இலத்தீன் வார்த்தையில் இருந்து தோன்றியது. இதற்கு கூட்டு அல்லது குழு என்று பொருள்.

9. பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை?

❖ ஒரே தலைமை
❖ சர்வாதிகாரியின் கீழ் ஒரே கட்சி ஆட்சி
❖ பயங்கரவாதம்
❖ பொருளாதார ஆளுமை

10. முசோலினி அரசருக்கும் போப்பாண்டவருக்கும் இடையே இருந்த வேற்றுமையை எவ்வாறு களைந்தார்?

1929ம் ஆண்டு லேட்டரன் உடன்படிக்கை மூலம் வாடிகன் நகரில் போப்பாட்சியை முசோலினி அங்கீகரித்தார். போப்பிற்கும் இத்தாலிய அரசுக்குமிடையே நிலவி வந்த போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

11. மியுனிச் உடன்படிக்கை சிறு குறிப்ப வரைக.

ஹிட்லர் மியுனிச் என்னுமிடத்தில் இங்கிலாந்து பிரதமர் நிவில் சேம்பர்லைன் உடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஹிட்லர் சூடட்டன்லந்தை மட்டுமே ஆக்கிரமிப்பு செய்யலாம் பிற இடங்களைக் கைப்பற்றுதல் கூடாது.

12. அழித்துப் பின்வாங்கும் கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக

ரஷ்யர்கள் பயிர்கள், பாலங்கள், இரும்புப் பாதைகள் போன்றவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருக்க அவற்றை தாங்களே தீயிட்டு அழித்துக்கொண்டு முன்னேறினர். ரஷ்யர்களின் இக்கொள்கையினால் ஜெர்மானியப் படைகளுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

13. அமெரிக்க ஜப்பான் மீது போர் தொடுக்கக் காரணம் யாது ?

1941 ஆம் ஆண்டு முத்து துறைமுகத்தில் இருந்த அமெரிக்க கடற்படைத் தளத்தை ஜப்பான் தாக்கியது. இந்த தாக்குதலால் அமெரிக்கா ஜப்பான் மீது போர் தொடுத்தது.

14. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை?

❖ உலக அரங்கில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுதல்
❖ அனைத்து நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்

15. ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய அங்கங்கள் யாவை?

1. ஐரோப்பிய நாடாளுமன்றம்
2. ஐரோப்பிய ஒன்றிய மன்றம்
3. ஐரோப்பிய ஆணையம்
4. ஐரோப்பிய நீதிமன்றம்
5. ஐரோப்பிய கணக்கீட்டாளர் மன்றம்.

16. பெரும் புரட்சியில் ஈடுபட்ட முக்கியத் தலைவர்கள் மற்றும் முக்கிய இடங்களைக் குறிப்பிடுக.

i. ஜான்சிராணி இலட்சுமிபாய் - மத்திய இந்தியா
ii. நானாசாகிப் - கான்பூர்
iii. பேகம் ஹஸ்ரத் மஹால் - லக்னோ

17. 1857- ஆம் ஆண்டு நடந்த புரட்சியின் உடனடிக் காரணம் யாது?

இந்திய இராணுவத்தில் ஆங்கிலேயரால் புதிய என்பீல்டு ரக துப்பாக்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தோட்டாக்களில் தடவப்பட்டு இருந்ததாகக் கருதிய இந்து மற்றும் இஸ்லாமியப்படை வீரர்கள் அத்தோட்டாக்களை உபயோகிக்க மறுத்தனர். மங்கள்பாண்டே என்ற வங்காளப்

படைவீரர் தோட்டாவை உபயோகிக்க மறுத்து தன் மேலதிகாரியைச் சுட்டுக் கொன்றார். அவர் கைது செய்யப்பட்டு பின் தூக்கிலிடப்பட்டார். அச்செய்தி பரவியவுடன் இந்தியப் படைவீரர்கள் புரட்சியை தொடங்கினர்.

18. ஆரிய சமாஜத்தின் பணிகள் யாவை?

1. ஆரிய சமாஜம் குழந்தை மணம், பலதார மணமுறை, பர்தா அணியும் முறை, போன்றவற்றை எதிர்த்தது.

2. பெண்கல்வி, கலப்பு மணம், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காக பாடுபட்டது.

19. பிரம்மஞான சபையின் கொள்கைகள் யாவை?

மக்களிடையே சகோதரத்துவ உணர்வை வளர்ப்பதற்காகவும், அறிவியல் மற்றும் இயற்கையின் நியதிகளை அறிந்து மக்களிடையே தெய்வீக சக்திகளை வளர்ப்பதுமே இச்சபையின் நோக்கங்கள் ஆகும்.

20. வள்ளலாரின் போதனைகள் யாவை?

i. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும்.

ii. மனித இனத்திற்குச் செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி.

21. சில முக்கிய மிதவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

i. சுரேந்திரநாத் பானர்ஜி

ii. தாதாபாய் நௌரோஜி

iii. பெரோஷா மேத்தா

iv. கோபாலகிருஷ்ண கோகலே

22. 1916- ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் லக்னோ மாநாட்டின் முக்கியத்துவத்தை கூறு.

i. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் ஒன்றுபட்டனர்.

ii. இந்த மாநாட்டில்தான் ஜவஹர்லால் நேரு, காந்தியை முதன் முதலாகச் சந்தித்தார்.

23. லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் முஸ்லீம் லீக்கின் முக்கியத்துவம் என்ன?

இம் மாநாட்டில் பூரண சுதந்திரம் பெறுவதே இந்திய தேசிய காங்கிரசின் நோக்கம் என அறிவிக்கப்பட்டது. ஜனவரி 26, 1930 ஆம் ஆண்டு நாடு முழுவதும் விடுதலை நாளாக கொண்டாடப்பட்டது.

24. சுப்பிரமணிய பாரதியாரின் ஒரு சில பாடல்களை எழுதுக.

1. வந்தே மாதரம்

2. அச்சமில்லை - அச்சமில்லை

3. எந்தையும் தாயும்

4. ஜெய பாரதம்

25. காமராஜரின் நலத்திட்டப்பணிகள் பற்றி குறிப்பு வரைக.

1. மதிய உணவுத்திட்டம்

2. புதிய பள்ளிகளைத் திறந்து இலவச கல்வி வழங்குதல்.

3. வேளாண்மையை மேம்படுத்துதல்

4. அணைகள் கட்டுதல்.

26. அரசரை உருவாக்குபவர் எனக் காமராஜர் கருதப்படுவது ஏன்?

1. 1964 ஆம் ஆண்டு லால்பகதூர் சாஸ்திரியை இந்திய பிரதமராக்குவதில் முக்கியப் பங்கு வகித்தார்.

2. இந்திரா காந்தியைப் பிரதமராக்குவதிலும் இவர் முக்கியப் பங்கு வகித்தார்.

27. சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள் யாவை?
1. மதம், ஜாதி, அரசியல் மற்றும் சமுதாயத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை எதிர்த்தது.
2. பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத் திருமணம் மற்றும் குழந்தைத் திருமண ஒழிப்பு முறை ஆகியவற்றிற்காக குரலெழுப்பியது.

28. பெரியார் வைக்கம் வீரர் என ஏன் அழைக்கப்பட்டார்?
1. 1924-ம் ஆண்டு கேரளாவில் உள்ள வைக்கத்தில் அரசு ஆலய நுழைவு தடைச்சட்டத்தை தளர்த்தி, அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது.
2. இதன் காரணமாக பெரியாருக்கு "வைக்கம் வீரர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

## புவியியல் 2 மதிப்பெண் "வேறுபடுத்துக"

**1. கிரீன்வீச் தீர்க்க நேரம் - இந்திய திட்ட நேரம்**

| கிரீன்வீச் தீர்க்க நேரம் | இந்திய திட்ட நேரம் |
|---|---|
| i. 0° தீர்க்கக் கோட்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. கிரின்வீச் வழியாகச் செல்கிறது.<br>ii. உலக நாட்டிற்கான நிரந்தர நேரமாகும். | i. 82 1/2° கிழக்கு தீர்க்கக் கோட்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. அலகாபாத் வழியாகச் செல்கிறது.<br>ii. இந்தியாவிற்கான நிரந்தர நேரமாகும். |

**2. மேற்கு தொடர்ச்சி மலை - கிழக்கு தொடர்ச்சி மலை**

| மேற்கு தொடர்ச்சி மலை | கிழக்கு தொடர்ச்சி மலை |
|---|---|
| i. தொடர்ச்சியான மலைகள்<br>ii. உயரமான சிகரம் ஆனைமுடி | i. தொடர்ச்சியற்ற மலைகள்<br>ii. உயரமான சிகரம் மகேந்திரகிரி. |

**3. மேற்கு கடற்கரை சமவெளி - கிழக்கு கடற்கரை சமவெளி**

| மேற்கு கடற்கரை சமவெளி | கிழக்கு கடற்கரை சமவெளி |
|---|---|
| i. இது குறுகலான சமவெளி.<br>ii. இதன் சராசரி அகலம் சுமார் 65 கி.மீ | i. இது பரந்து விரிந்த சமவெளி.<br>ii. இதன் சராசரி அகலம் சுமார் 120 கி.மீ |

**4. மலைகளின் காற்று மோதும் பக்கம் - காற்று மோதாப் பக்கம்**

| காற்று மோதும் பக்கம் | காற்று மோதா பக்கம் |
|---|---|
| i. காற்று வீசும் திசையை நோக்கி உள்ள பகுதி ஆகும்.<br>ii. அதிக மழைபொழிவைப் பெறுகிறது. (எ.கா) மும்பை | i. காற்று வீசும் திசைக்கு மறைவாக உள்ள பகுதி ஆகும்.<br>ii. குறைந்த மழையைப் பெறுகிறது. (எ.கா.) புனே |

5. **தென்மேற்கு பருவகாற்று - வடகிழக்கு பருவகாற்று**

| **தென்மேற்கு பருவகாற்று** | **வடகிழக்கு பருவகாற்று** |
|---|---|
| i. ஜுன் முதல் செப்டம்பர் வரை வீசுகிறது. | i. அக்டோபர் முதல் நவம்பர் வரை வீசுகிறது. |
| ii. இக்காற்றில் ஏராளமான ஈரப்பதம் காணப்படும். 85% மழையை இந்தியா பெறுகிறது. | ii. இக்காற்று வறண்ட காற்றாக காணப்படும். 15% மழையை இந்தியா பெறுகிறது. |

6. **வானிலை - காலநிலை**

| **வானிலை** | **காலநிலை** |
|---|---|
| i. ஓரிடத்தில் ஒரு நாளில் வளிமண்டலத்தில் நிலவும் அன்றாட நிலையைக் குறிப்பதாகும். | i. ஓரிடத்தின் நீண்ட நாளைய சராசரி வானிலையை குறிப்பதாகும். |
| ii. இது ஒவ்வொரு நாளும் கணக்கிடப்படுகிறது. | ii. 35 வருடகால வானிலை பதிவுகள் தேவைப்படுகிறது. |

7. **லூ காற்று - நார்வெஸ்டர்ஸ்**

| **"லு" காற்று** | **நார்வெஸ்டர்ஸ்** |
|---|---|
| i. வலிமையான வெப்பக் காற்று ஆகும். | i. இடியுடன் கூடிய தலக்காற்று ஆகும். |
| ii. குறைந்த மழையைத் தருகிறது. | ii. கனமழையை தருகிறது. |

8. **புதுப்பிக்கக்கூடிய வளம் - புதுப்பிக்க இயலா வளம்**

| **புதுப்பிக்கக்கூடிய வளம்** | **புதுபிக்க இயலா வளம்** |
|---|---|
| i. மீண்டும் மீண்டும் எளிதாக உற்பத்தி செய்யக்கூடிய வளங்கள் | i. மீண்டும் கிடைக்காப் பெறாத வளங்கள். |
| ii. (எ.கா) சூரிய ஒளி, காற்று, தண்ணீர் | ii. (எ.கா) நிலக்கரி, கச்சா எண்ணெய் |

9. **காற்றுசக்தி - அனல் சக்தி**

| **காற்றுசக்தி** | **அனல் சக்தி** |
|---|---|
| i. காற்றில் இருந்து காற்றுசக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. | i. நிலக்கரி, பெட்ரோலியம் இயற்கை வாயு போன்றவற்றிலிருந்து பெறப்படுகிறது. |
| ii. மாசு ஏற்படுத்தாது. | ii. மாசு ஏற்படுத்தக்கூடியது. |

10.. **வேளாண் சார்ந்த தொழிலகம் - கனிமம் சார்ந்த தொழிலகம்**

| **வேளாண் சார்ந்த தொழிலகம்** | **கனிமம் சார்ந்த தொழிலகம்** |
|---|---|
| i. வேளாண் பொருள்களை மூலப்பொருளாக கொண்டுள்ளன. | i. உலோகம் மற்றும் உலோகமற்ற கனிமப்பொருட்களை மூலப்பொருளாக கொண்டுள்ளன. |
| ii. (எ.கா) சணல் ஆலை, பருத்தி ஆலை, சர்க்கரை ஆலை | ii. (எ.கா) இரும்பு எ∴கு தொழிலகம் |

11.. **இரும்பு எஃகு தொழிலகம் - மென்பொருள் தொழிலகம்**

| இரும்பு எஃகு தொழிலகம் | மென்பொருள் தொழிலகம் |
|---|---|
| i. சோட்டா நாக்பூர் பகுதிகளில் அதிகமாக அமைந்துள்ளது. | i. இந்தியாவின் பெரு நகரங்களில் அமைந்துள்ளது. |
| ii. இந்தியாவில் 11 ஒருங்கிணைக்கப்பட்ட எஃகு தொழிலகங்களும் 150 சிறிய எஃகு ஆலைகளும் உள்ளன. | ii. 500க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் நம்நாட்டில் உள்ளன. |

12. **தேசிய நெடுஞ்சாலை - மாநில நெடுஞ்சாலை**

| தேசிய நெடுஞ்சாலை | மாநில நெடுஞ்சாலை |
|---|---|
| i. மாநில தலைநகரங்களை தேசிய தலைநகரத்துடன் இணைக்கிறது. | i. மாநிலத்தின் தலைநகரங்களுடன் மாவட்ட தலைநகரங்களை இணைக்கிறது, |
| ii. மத்திய பொதுப்பணித்துறையால் பராமரிக்கப்படுகிறது. | ii. மாநில பொதுப்பணித்துறையால் பராமரிக்கப்படுகிறது. |

13. **ஏற்றுமதி - இறக்குமதி**

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| i. உபரி பொருள்களை அந்நிய செலவாணிகளுக்காக வெளிநாட்டில் விற்பதாகும். | i. நமக்கு தேவையான பொருட்களை வெளிநாட்டில் இருந்து வாங்குவது ஆகும். |
| ii. 7500 விதமான பொருட்களை 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. | ii. 6000 விதமான பொருட்களை 140 நாடுகளுக்கு இறக்குமதி செய்கிறது. |

14. **உள்நாட்டு வணிகம் - பன்னாட்டு வணிகம்**

| உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| i. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம். | i. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம். |
| ii. நிலவழி போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. | ii. நீர்வழி போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. |

## பொருளியல்

**5 மதிப்பெண் வினாக்கள்**

1. நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படைக் கருத்துக்கள் விவரி

**1. மொத்த நாட்டு உற்பத்தி**

ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி**

ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் அந்நாட்டிற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பைக் குறிக்கும்.

2. நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம் யாது ?

1. நாட்டின் பொருளாதார நிலையைக் கணக்கிட.
2. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பிட.
3. நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அளவிட.
4. நாட்டு வருமானத்தில் மூன்று துறைகளின் பங்களிப்பை அறிந்திட.
5. அரசு பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க கொள்கை வகுக்கவும், திட்டமிடவும் பயன்படுகிறது.

3. நலம் நாடும் அரசின் பணிகளை விவரி?

1. **பாதுகாப்பு பணிகள்**

* சட்ட ஒழுங்கை பராமரிப்பது
* மக்களை அந்நிய நாட்டு படையெடுப்பு மற்றும் உள்நாட்டுக் கலவரங்களில் இருந்து பாதுகாப்பது.

2. **நிர்வாகப் பணிகள்**

சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை மூலம் செயல்படுத்துதல்.

3. **சமூக பாதுகாப்பு பணிகள்**

ஏழைகள், உடல்நலமற்றோர் மற்றும் வேலையற்றோர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.

4. **பொருளாதாரப் பணிகள்**

வேளாண்மை வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகளை விவரி?

1. **உற்பத்தி முறை**

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் மூலம் கணக்கிடல்.

2. **வருமான முறை**

நாட்டில் உள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடல்.

3. **செலவின முறை**

நுகரும் பொருட்களின் செலவு, முதலீடு, சேமிப்பு ஆகியவற்றின் மூலம் கணக்கிடல்.

## குடிமையியல்

1. பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கை பற்றி எழுதுக.

**பஞ்சசீலம்**

* ஒவ்வொரு நாடும் பிறநாடுகளின் இறையாண்மையை மதித்தல்.
* எந்த ஒரு நாடும் பிறநாட்டைத் தாக்கக் கூடாது.
* மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது.

* அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
* ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

**அணிசேராக் கொள்கை**

இரண்டாம் உலகப்போருக்குப்பிறகு உலக நாடுகள் இரண்டு பகைமை அணிகளாக பிரிந்தன. அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும், ரஷ்யாவின் தலைமையில் மற்றொரு அணியும் உருவாகின. இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக விளங்குகிறது.

2. சார்க் அமைப்பு பற்றி குறிப்பு வரைக.
* இந்தியாவின் முயற்சியால் அமைதியை நிலைநாட்ட சார்க் அமைப்பு தோன்றியது.
* சார்க் அமைப்பு 1985ம் ஆண்டு தோன்றியது.
* இது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
* இதன் முதல் பொதுச்செயலாளர் ஆசான் ஆவார்.
* இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூடான், வங்காளதேசம், இலங்கை, மாலத்தீவுகள் ஆகியவை உறுப்பு நாடுகள்.
* ஆப்கானிஸ்தான் 8-வது உறுப்பு நாடாக சேர்ந்துள்ளது.
* போக்குவரத்து, தகவல் தொடர்பு, சுற்றுலா, சுகாதாரம், மற்றும் வேளாண்மை போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் செயல்படுகின்றன.

## புவியியல்

**5 மதிப்பெண் வினாக்கள்**

1. இந்தியா ஓர் துணைக்கண்டம் - காரணம் கூறுக.

கண்டம் என்பது பல்வேறு வகையான

1. இயற்கை அமைப்புகளையும்
2. காலநிலைகளையும்
3. இயற்கைத் தாவரங்களையும்
4. கலச்சாரக் கூறுகளையும்
5. பல்வேறு இனங்களையும், மொழிகளையும்
6. மிகப்பரந்த நிலப்பரப்பையும் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு கண்டத்திற்குரிய மேற்கண்ட பண்புகள் அனைத்தும் இந்தியாவில் காணப்படுவதால், இந்தியா ஓர் துணைக்கண்டம் ஆகும்.

2. வேற்றுமையில் ஒற்றுமை பற்றி விவரி

1. இந்தியாவில் மிக உயரமான சிகரம் $K_2$-வும், தாழ்ந்த கடற்கரை சமவெளியும் உள்ளது.
2. மிக அதிக மழை பெறும் மௌசின்ராமும் , குறைந்த மழைபெறும் தார் பாலைவனமும் இங்குள்ளது.
3. அடர்ந்த காடுகளும், வறண்ட முட்புதர்களும் உள்ளது.
4. வேறுபட்ட இயற்கை சூழ்நிலையும், காலநிலையும் காணப்படுகின்றன.

5. பல்வேறு வகையான தாவரங்களும், விலங்குகளும் இந்தியாவில் உள்ளன. எனவே இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை உள்ள நாடு என அறியப்படுகின்றது.

3. இமயமலைகள் உருவான விதத்தினை விவரி?

1. பல மில்லியன் வருடங்களுக்கு முன் "பாஞ்சியா" என்ற நிலப்பகுதியும், "பாந்தலாசா" என்ற கடல் பகுதியும் இருந்தது.
2. நிலப்பகுதியானது "அங்காரா" என்னும் வடபகுதியாகவும், "கோண்டுவானா" என்னும் தென்பகுதியாகவும் பிரிந்தது.
3. இந்த நிலப்பகுதியைப் பிரிக்கும் நீர்ப்பகுதி டெத்தீஸ் கடல் என்று அழைக்கப்பட்டது.
4. அங்காரா, கோண்டுவானா நிலப்பகுதியில் இருந்து வரும் ஆறுகள் தான் கொண்டு வந்த படிவுகளை டெத்தீஸ் கடலில் படிய வைத்தன.
5. நீண்ட காலத்திற்கு பிறகு இப்படிவுகள் புவியின் உள் இயக்க சக்தி விசைகளால் உயர்ந்து இமயமலைகள் என்றழைக்கப்படும் மடிப்பு மலைகளை உருவாக்கின.

4. இமயலையின் முக்கியத்துவத்தை விவரி.

1. இமயமலைகள் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது.
2. அந்நிய படையெடுப்பைத் தடுக்கிறது.
3. தென்மேற்குப் பருவக்காற்றினை தடுத்து நல்ல மழைப்பொழிவைத் தருகிறது.
4. இம்மலைகள் இல்லாதிருப்பின் நாட்டின் பெரும்பகுதி வெப்பமானதாகவும் வறண்ட பாலைவனமாகவும் மாறியிருக்கும்.
5. வற்றாத ஆறுகள் இங்கு உருவாகின்றன.

5. தென்மேற்குப் பருவகாற்றின் ஏதேனும் ஒரு கிளையினை விவரி.

தென்மேற்கு பருவகாற்றின் இரு கிளைகள்

1. அரபிக்கடல் கிளை. 2.வங்காளவிரிகுடா கிளை

**அரபிக்கடல் கிளை**

1. இக்காற்று ஈரப்பதமிக்கக் காற்று
2. முதல் பகுதி மேற்கு தொடர்ச்சி மலைகளால் தடுக்கப்பட்டு மேற்கு கடற்கரை அதிக மழைப்பொழிவைத் தருகிறது.
3. இரண்டாவது பகுதி விந்திய சாத்பூரா மலைகளைக் கடந்து சோட்டா நாகபுரி பகுதிக்கு மழையைத் தருகிறது.
4. மூன்றாவது பகுதி காற்றுக்கு இணையாக அமைந்துள்ள ஆரவல்லி மலை காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் மழையைத் தருவதில்லை.
5. பின்பு வங்காள விரிகுடா கிளையில் இணைகின்றது.

6. மழைநீர் சேகரிப்பினை விளக்குக.

1. சீரற்ற முறையில் மழை பொழிவதால் மழைநீரை சேகரிப்பது அவசியமாகிறது.
2. மழைநீர் அறுவடை என்பது மழைநீரை நேரடியாக சேமிக்கும் முறை.
3. நமக்குத் தேவையான நீரை தரைக்கு அடியில் சேகரித்துப் பின்னர் பயன்படுத்திக் கொள்வது ஆகும்.
4. மழைநீரை ஆழமான நிலத்தடி நீர்மட்டதுடன் ஊடுருவச் செய்து தேவை ஏற்படும் போது குழாய்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
5. இதன் மூலம் மழைநீரின் உண்மை மதிப்பு, பயன்படுத்தும் முறையினை புரிந்து கொள்ளலாம்.

7. காடுகளின் முக்கியத்துவத்தை விவரி

1. காடுகள் வீட்டுத் தேவைக்கும், வணிகத்திற்கும் தேவையான மரங்களையும் தொழிற்சாலைக்கு மூலப்பொருட்களையும் அளிக்கின்றன.
2. மண்ணரிப்பை கட்டுப்படுத்துகிறது.
3. நாட்டின் எரிசக்தி தேவையை 40 சதவீதம் பூர்த்தி செய்கின்றன.
4. காடுகள் கால்நடைகளை மேய்ப்பதற்கும் பால்ப் பண்ணைப் பொருட்கள் உற்பத்திக்கும் உதவுகிறது.
5. வனப்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலவாணியை ஈட்டுகிறது.

8. இந்திய வேளாண் தொழிலில் உள்ள ஏதேனும் மூன்று பிரச்சனைகளை விவரி?

1. பருவக்காற்றுகள் ஒழுங்காகவும் சீராகவும் வீசுவதில்லை. இது வேளாண்மைக்கு சாதகமான சூழ்நிலையாக அமைவதில்லை.
2. பெருகிவரும் சாலைகளின் கட்டுமானப் பணியால் மழைநீரின் இயல்பான ஓட்டம் தடுக்கப்பட்டு வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.
3. தொழிற்சாலை, குடியிருப்பு கட்டிடங்கள் பெருகி வருவதால் வேளாண் நிலங்களின் பரப்பு குறைந்து வருகிறது.

9. மும்பையில் பருத்தி ஆலைகள் அமைய சாதகமான காரணிகளை விவரி?

(அல்லது)

"பருத்தி ஆலைகள்" மும்பையில் அதிகமாக அமைந்ததற்கான காரணங்கள் யாவை?

கீழ்க்கண்ட காரணிகள் மும்பை பருத்தி ஆலைகளுக்கு சாதகமாக உள்ளன.

1. துறைமுகத்தின் அமைவிடம் முடிக்கப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்ய ஏதுவாக உள்ளது.
2. பருத்தி விளையும் இடங்களுக்கும் அருகிலேயே தேவையான இரயில் மற்றும் சாலைப்போக்குவரத்து இணைப்பு உள்ளது.
3. நூலிழை தயாரிப்பிற்கு ஈரப்பதம் கொண்ட காலநிலை உதவுகிறது.
4. மூலதனப்பொருட்கள் மற்றும் நிதி வசதி எளிதாக கிடைக்கின்றன.
5. பணியாட்கள் ஏராளமாக கிடைக்கின்றனர்.

10. அமில மழையின் விளைவுகள் யாவை?

1. அமில மழையால் கடலில் மீன் உணவான பிளாங்டன் உயிர்வாழ இயலாது.
2. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. இது உணவுச் சங்கிலியை பாதிக்கிறது.
3. கடல் வெப்பம் அதிகரிப்பால் பவளப் பாறைகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது
4. காடுகளும், பாலைவனங்களும் பாதிக்கப்படுகின்றன.
5. உயிரினப்பன்மை இழப்பு மற்றும் இன மறைவுகள் ஏற்படுகின்றன.

11. இந்திய சாலைகளின் வகைகளை விவரி?

1. **கிராம சாலைகள்**

   கிராமங்களை நகரங்களுடன் இணைக்கிறது. இச்சாலைகள் கிராம பஞ்சாயத்தால் பராமரிக்கப்படுகிறது.

2. **மாவட்ட சாலைகள்**

   கிராமங்களை மாவட்டத்தின் தலைநகரங்களுடன் இணைக்கிறது. இச்சாலைகள்

மாநகராட்சி, நகராட்சியால் பராமரிக்கப்படுகிறது.

3. **மாநில நெடுஞ்சாலைகள்**

   மாநிலத்தின் தலைநகரத்துடன் மாவட்ட தலைநகரங்களை இணைக்கிறது. மாநில பொதுப்பணித் துறையால் பராமரிக்கப்படுகிறது.

4. **தேசிய நெடுஞ்சாலைகள்**

   மாநில தலைநகரங்களை தேசிய தலைநகரத்துடன் இணைக்கிறது. மத்திய பொதுப்பணித்துறையால் பராமரிக்கப்படுகிறது.

5. **தங்க நாற்கரச் சிறப்பு சாலைகள்**

   இந்திய அரசால் ஆரம்பிக்கப்பட்ட சிறப்பு தேசிய நெடுஞ்சாலை ஆகும்.

6. **எல்லையோரச் சாலைகள்**

   நம் நாட்டின் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைகளில் அமைக்கப்பட்டு இந்திய அரசால் பராமரிக்கப்படுகிறது.

12. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினை விவரி

1. எந்தவொரு பகுதியின் வளத்தைப் பற்றிய விவரங்களை சேகரிக்க உதவும். சிறந்த நுட்பம் தொலை நுண்ணுணர்வு நுட்பமாகும்.
2. இதைப் பயன்படுத்தி புவியின் பாறைக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம் மற்றும் உயிர்க்கோளம் ஆகியவற்றை அளவிடலாம்.
3. புவியியலாளர்கள் தொலை உணர்விகள் என்ற கருவியை பயன்படுத்தி புவியைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கின்றன.
4. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் ஆரம்பமான வான்வழிப்படங்கள் மூலம் மேப்பியலாளர்கள் வரைபடங்களை உருவாக்கினார்.
5. இத்துறையில் 1960-ல் செயற்கை கோளைப் பயன்படுத்தி ஒரு புரட்சியும் 1970ல் புவிவள நுட்ப செயற்கை கோளை பயன்படுத்தி 2-வது புரட்சியும் ஏற்பட்டது.

13. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் தொகுதிகளை விவரி.

1. **இலக்கு**

   எந்த பொருளைப் பற்றி தகவல் பெற விரும்கிறோமோ அதனை இலக்கு என்கிறோம்.

2. **ஆற்றல் மூலம்**

   சூரியன், ஆற்றலின் மூலம் ஆகும். இது இயற்கை மற்றும் செயற்கை முறை என இரு வகைப்படும்.

3. **பிரதிபலிக்கும் வழி**

   சூரியனிடமிருந்து வரும் ஆற்றல் வளிமண்டலத்தில் பிரதிபலிக்கப்படுகிறது.

4. **உணர்வி**

   பிரதிப்பலிப்பின் மூலம் இலக்கைப் பற்றிய தகவல்கள் உணர்விகளுக்கு அனுப்பப்படுகிறது.

14. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினை பயன்படுத்தும் முறையினை விவரி?

1. தொலை நுண்ணுணர்வில் சூரியன் ஒரு ஆற்றல் வளம். இது பொருட்களுக்குத் தேவையான மின்காந்த ஆற்றலை வழங்குகிறது.
2. சூரிய ஆற்றல் வளிமண்டலக் கூறுகளுடனும், பின் புவிப்பரப்புத் தோற்றங்களுடனும் இடைச்செயல் புரிகிறது.

3. இலக்கிலிருந்து ஆற்றல் வெளிப்படும் பொழுது மின்காந்த அலைகளை சேகரித்து பதிவு செய்து கொள்கிறது.
4. சேகரிக்கப்பட்ட மின்காந்த அலைகள் மின்குறியீடுகளாக மாற்றி பல்வேறு பதிம எண்களாக மாற்றப்படுகின்றன.
5. முறைப்படுத்தப்பட்ட பதிமங்கள் பகுப்பாய்வு செய்து, தகவல் தொகுப்பு உருவாக்கப்படுகிறது.

15. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் பயன்களை விவரி.
1. நிலப்பரப்பினை பற்றிய விவரங்களைச் சுருக்கமாக அளிக்கின்றன.
2. அணுகமுடியாத புவிப்பகுதியின் விவரங்களை கண்டறியப் பயன்படுகிறது.
3. புவிப்பகுதி விவரங்களை எளிதாக, வேகமாக சரியாக திரட்டி தருகிறது.
4. நாட்டு நலத்திட்டங்கள் தீட்ட, திட்டங்களை முழுமையாக செயல்படுத்த உதவுகிறது.
5. மக்களடர்த்தி, மண்வகை போன்ற கருத்து நிலவரைபடங்களை மிகத்துல்லியமாக வரைய உதவுகிறது.

16. பேரிடர் அபாய நேர்வு குறைப்பில் ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
1. ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பு எனப்படுவது அவசர காலக்கட்டங்களில் அபாய நேர்வுகளைக் குறைப்பதற்கான ஒரு தகவல் அளிப்புத் தொகுதி ஆகும்.
2. இது நான்கு முக்கியக் கூறுகளை உள்ளடக்கியது ஆகும்.
3. ஆழ்ந்து கவனித்தல் மற்றும் பதிவுகளைப் புரிந்து கொள்ளுதல்.
4. அபாயத்தேர்வு பற்றிய விழிப்புணர்வு மற்றும் அடையாளம் காணுதல்
5. எச்சரிக்கை மற்றும் பரவச் செய்தல்.
6. பொருத்தமான பிரதிபலிப்பு.

## வரலாறு

### 5 மதிபபெண் வினாக்கள்

1. ஏகாதிபத்தியம் ஏற்படக் காரணங்கள் யாவை?
1. தொழிற்புரட்சியின் காரணமாக பொருட்களின் உற்பத்தி அதிகரித்தது. இதனால் ஆசியா மற்றும் அமெரிக்க நாடுகளை குடியேற்றங்களாக்க விரும்பின.
2. தேசிய மயமாக்கப்பட்ட நாடுகள் தம் நாட்டின் கௌரவத்தை அதிகரிக்க செய்யும் பொருட்டு அதிக குடியேற்றங்களை அடைய விரும்பின.
3. வல்லமை சமநிலை ஆதிக்கம் பெற ஐரோப்பிய நாடுகள் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தின.
4. புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு ஏகாதிபத்தியக் கொள்கையை ஊக்குவித்தன.
5. மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் வேலையின்மை பிற நாடுகளைத் தேடிச் செல்லத் தூண்டியது.
6. சட்ட ஒழுங்கின்மை குடியேற்றங்களை கைப்பற்றுவதற்கு வழிவகுத்தது.

2. ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை?
1. வலிமை மிக்க நாடுகள் வலிமையற்ற நாடுகளில் போக்குவரத்து மற்றும் தொடர்புத் துறையில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தின.

2. புதிய விவசாய முறைகளைக் கையாண்டு உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தன.
3. குடியேற்ற நாடுகள் தங்களின் சுதந்திரத்தை இழந்தன.
4. குடியேற்ற நாடுகளில் உள்நாட்டு தொழில்கள் நசுக்கப்பட்டதால் வேலையின்மை அதிகரித்தன.
5. குடியேற்ற நாடுகளில் இனவேறுபாட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டன.

3. பிராங்களின் டி.ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் பற்றி விரிவான விடையளி.

1. எப்.டி.ரூஸ்வெல்ட் புதிய பயனுரிமை என்ற புதிய சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார். இது உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
2. இதன் அடிப்படையில் டென்னசி பள்ளத்தாக்கு திட்டம் அறிவிக்கப்பட்டது.
3. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி அமைக்கப்பட்டு வங்கிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் கடன் வழங்கப்பட்டது.
4. பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டமும், தேசிய தொழில் மீட்புச் சட்டமும் கொண்டு வரப்பட்டது.
5. வேளாண்மைப் பொருள் சீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது.

4. இரண்டாம் உலகப்போர் ஏற்படக் காரணங்களில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

1. வெர்செயில்ஸ் உடன்படிக்கை ஜெர்மனியை இழிவுபடுத்தியது. இது போருக்கு வழிவகுத்தது.
2. ஜெர்மனி ஜெர்மானியர்களுக்கே, இத்தாலி இத்தாலியர்களுக்கே என்ற கொள்கைகள் தேசிய எழுச்சியை ஏற்படுத்தின.
3. வல்லரசு நாடுகள் சர்வதேச சங்கத்தை மதிக்க தவறின.
4. ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு ஒப்பந்தம் போருக்கு வித்திட்டது.
5. ஹிட்லரின் ஆக்கிரமிப்புக் கொள்கை இரண்டாம் உலகப்போருக்கு காரணமாயிற்று.

5. இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை?

1. ஏராளமான உயிரிழப்பையும், பொருளாதார அழிவையும் ஏற்படுத்தியது. சுமார் 50 மில்லியன் மக்கள் உயிர் இழந்தனர்.
2. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்தது.
3. இப்போர் பிரிட்டனையும், பிரான்சையும் வலுவிழக்கச் செய்தது.
4. அமெரிக்காவும், ரஷ்யாவும் வல்லரசாக மாறின. இவ்விரு நாடுகளுக்கிடையே பனிப்போர் தொடங்கியது.
5. உலக அமைதியைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது.

6. சர்வதேச சங்கத்தின் சாதனைகளை விவரி?

1. பின்லாந்து - சுவீடன் இடையே பால்டிக் கடல் பகுதியில் அமைந்துள்ள ஆலந்து தீவு உரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தது.
2. சைலீசியாவின் எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
3. கிரீஸ் - பல்கேரியாவிற்கும் இடையேயான எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.

4. பெரு - கொலம்பியாவிற்கும் இடையேயான எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
5. உலக நாடுகளின் கல்வித் தரத்தை உயர்த்தவும் பாடுபட்டது.

7. ஐ.நா.வின் முக்கியமான சாதனைகள் யாவை?
1. ஈரான் மற்றும் ஈராக் சிக்கல்களை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.
2. ஆப்கானிஸ்தானில் இருந்த இரஷ்யப்படைகளை வெளியேறும்படி செய்தது.
3. 1963 ஆம் ஆண்டு அணு சோதனைத் தடைச் சட்டத்தை நிறைவேறச் செய்தது.
4. கொரியப் போரை முடிவுக்கு கொண்டு வந்தது.
5. சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவுக்குக் கொண்டு வந்தது.

8. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?
1. ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
2. இந்தியாவில் ஆங்கில அரசின் நேரடி ஆட்சி நடைமுறைக்கு வந்தது.
3. இந்திய மன்னர்களுக்கு தத்து எடுக்கும் உரிமை வழங்கப்பட்டது.
4. இந்தியர்களுக்கு முழு சமயச் சுதந்திரம் வழங்கப்பட்டது.
5. இந்தியாவின் பழமையான பண்பாடு, பழக்க வழக்கங்கள் மதிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

9. தேசிய இயக்கம் தோன்றுவதற்கான ஐந்து காரணங்களைக் கூறுக.
1. ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்தை மக்களிடையே உருவாக்கியது.
2. ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு ஏற்பட்டதால் அந்த நாடுகளைப் போல தாங்கள் விடுதலைப் பெற வேண்டும் எனக் கருதி போராட எண்ணினர்.
3. இந்தியத் தலைவர்கள் மற்றும் அறிஞர்கள் மக்களிடையே நாட்டுப்பற்றை தூண்டினர்.
4. நவீன தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சி மக்களின் கருத்துக்களை நாட்டின் மூலை முடுக்குகளுக்கு எடுத்துச்சென்றன.
5. ஆங்கிலேயரின் இன வேறுபாட்டுக் கொள்கை இந்தியர்களிடையே தேசியம் வளர்வதற்கு வழிவகுத்தது.

10. 1920-22 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலைகளை விளக்குக. ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டது ஏன்?
1. முதற்கட்டமாக ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பதவிகளையும், பட்டங்களையும், விருதுகளையும் துறந்தனர்.
2. இரண்டாவது கட்டமாக வேலை நிறுத்தம் உட்பட பெரும் போராட்டங்களை நடத்தினர்.
3. மூன்றாவது கட்டமாக வரிகொடா இயக்கம் தொடங்கப்பட்டது.
4. சௌரி சௌரா என்னுமிடத்தில் நடைபெற்ற போராட்டத்தில் காவலர்கள் துப்பாக்கி சூடு நடத்தினர். எனவே விவசாயிகள் காவல் நிலையத்தைத் தாக்கி தீயிட்டு கொளுத்தியதில் 22 காவலர்கள் உயிரிழந்தனர்.
5. இதனால் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டார்.

11. உப்புச் சத்தியாகிரகம் - குறிப்பு வரைக.
1. காந்தியடிகள் 1930 ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார்.
2. ஆங்கில அரசு உப்பின் மீது வரி விதித்தது.

3. காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து பாதயாத்திரை தொடங்கி தண்டி வந்து சேர்ந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.
4. காந்திஜி தண்டி கடற்கரையில் கடல் நீரிலிருந்து உப்புக் காய்ச்சி, உப்புச் சட்டங்களை மீறினார்.
5. எனவே அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

12. மூன்று வட்ட மேஜை மாநாடுகளின் முக்கியத்துவத்தை விளக்குக?

1). முதல் வட்ட மேஜை மாநாடு (1930)
1930-ம் ஆண்டு லண்டனில் கூடியது. காங்கிரஸ் கலந்து கொள்ளாததால் இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

2). இரண்டாம் வட்டமேஜை மாநாடு ( 1931)
1931-ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்றது. இம்மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார். பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை.

3). மூன்றாம் வட்ட மேஜை மாநாடு (1932)
1932-ம் ஆண்டு லண்டனில் நடைபெற்றது. காங்கிரஸ் கலந்து கொள்ளாததால் இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

13. வெள்ளையனே வெளியேறு இயக்கம் - குறிப்பு வரைக?

1. கிரிப்ஸ் திட்டம் தோல்வி அடைந்தது.
2. அது காந்தியடிகளின் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வந்தது.
3. எனவே அவர் ஆங்கிலேயர் இந்திய நாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனக் கோரினார்.
4. 1942ம் ஆண்டு ஆகஸ்டு 8ம் நாள் மும்பையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது.
5. காந்தி, இந்தியாவை விடுதலை பெறச் செய்வோம் அல்லது அதற்காக செத்து மடிவோம் என்றார்.

விளைவு:

சரியான வழிகாட்டுதல் இல்லாமையால் நாடெங்கும் வன்முறைக் கலவரங்கள் வெடித்தன.

14. பாரதியார் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் - நிரூபி.

1. பாரதியார் டிசம்பர் 11, 1882 ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் பிறந்தார்.
2. சுதேச மித்திரன் பத்திரிக்கையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.
3. சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.
4. பாரதியார் பாடல்கள் - வந்தேமாதரம், அச்சமில்லை, அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெயபாரதம்.
5. 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் பாரதியார் மறைந்தார்.

15. நீதிக்கட்சியின் தோற்றம் மற்றும் சாதனைகளைப் பற்றி ஒரு பத்தியில் விடையளி?

1. பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக, பிராமணர் அல்லாதவர்களால் தொடங்கப்பட்ட ஒரு சமூக இயக்கம் ஆகும்.
2. 1916 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

சாதனைகள் :

1. தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தியது.
2. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
3. தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றப்பட்டன.
4. மருத்துவக் கல்விக்கு ஊக்கமளித்தது.
5. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

**காலக்கோடு**
**கி.பி. 1900 - கி.பி 1920**

1 அலகு - 10 ஆண்டுகள்




1905- வங்காளப் பிரிவினை

1906 முஸ்லீம் லீக் கட்சி தோற்றம்

1907 - சூரத் பிளவு

1909 - மிண்டோ மார்லி சீர்திருத்தம்

1914- முதல் உலகப்போர் தொடக்கம்

1916 - தன்னாட்சி இயக்கம்

1918 - முதல் உலகப்போர் முடிவு

1919 - ரௌலட் சட்டம்

## காலக்கோடு
## கி.பி. 1920 - கி.பி 1940

1 அலகு - 10 ஆண்டுகள்



**காலக்கோடு**
**கி.பி. 1930 - கி.பி 1950**

1 அலகு - 10 ஆண்டுகள்

